[2nd March 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If hon. Members want to express their sense of resentment, they can express it outwardly.

V.—ADJOURNMENT MOTIONS.

MR. SPEAKER : Let us now take up the adjournment motions.

THE HON. SRI R. VENKATARAMAN : As the hon. Members who have given notice of them, are not in the House, they shall be deemed to have lapsed.

MR. SPEAKER : The adjournment motions given notice of by Sri V. R. Nedunchezhiyan, Sri Saw. Ganesan, Sri M. Kalyanasundaram, Sri K. R. Nallasivam and Sri M. V. Karivengadam are all deemed to have lapsed, since they are not here to move them.

VI.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965—66.

திரு. ஏ. பி. சி. வீரபாகு : கனம் சபாநாயகர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த பட்ஜட்டை நான் ஆதரிக்கிறேன் ; ஆதரிக்கும் முகந்தான், சில விஷயங்களைத் தங்கள் மூலம் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் தங்களுடைய பட்ஜட் உரையில், சென்ற 10, 15 ஆண்டுகளாக, நம்முடைய தமிழ் நாடு பொருளாதாரத் துறையிலே எவ்வளவு வேகமாக முன்னறேி வந்திருக்கிறது, அதற்குக் காரணம் தமிழ் நாட்டின் ஜனநாயகப் பண்பும், மக்களுடைய அமைதியான போக்கும் உறுதுணையாக இருந்து, முன்னேற்றத்திற்கு ஆக்கம் அளித்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில், இந்தி எதிர்ப்பின் பெயரால், தமிழ் நாட்டிலே நடந்த, சில சம்பவங்களுக்கு வருத்தம் தெரிவித்து, ஜனநாயகத்தின் முறையான பாதுகாப்பிற்காக எதிர்க்கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் தன்னுடைய பட்ஜட் உரையிலே, அதன் முடிவிலே கோரியிருக்கிறார்கள். ஆனால், இரண்டு நாட்களாக இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளைக் கவனிக்கும்போது, தமிழ்நாட்டினுடைய அமைதியின்மைக்கு இந்தச் சபையே காரணமோ என்ற ஒரு ஐயப்பாடு எனக்கு எழுகிறது. இதற்கு முன்னால், உண்மையாகவே இந்தியினுடைய வளர்ச்சியினால், பொது மொழியினுடைய வளர்ச்சியினால், தமிழ்நாட்டிற்கும் தமிழுக்கும் பாதகம் வருமோ என்ற பொதுவான . . . .

கனம் சபாநாயகர் : ‘அமைதியின்மைக்குச் சபையே காரணமோ’ என்று கனம் அங்கத்தினர் அவர்கள் எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்வது போல் இருக்கிறது. That may be objected to by some.

* திரு. ஏ. பி. ஸி. வீரபாகு : கனம் சபாநாயகர் அவர்களே, ‘இந்தச் சபையில் நடந்த இரண்டு நாள் சம்பவங்கள்’ என்று நான் முதலிலேயே குறிப்பிட்டேன். ஒவ்வொரு வார்த்தையையும் எடுத்துக்கொண்டு அர்த்தம் செய்வதென்றால் அதுவே ஒரு ‘எக்ஸ்ப்ளனேடரி நோட்’ ஆகப் போய்விடும்.